## <u>கடவுள் வாழ்த்து</u>

உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கிலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசரண் நாங்களே.

**-கவிச்சக்கரவர்த்தி கம்பர்.**

## விநாயகர் வணக்கம்
## நாட்டரசன்கோட்டைமஞ்சனத்திப் பிள்ளையார் துதி

மஞ்சுகள் தோய் மாடங்கள் மலிகின்ற வள நகராம்
எஞ்சலிலா இனியவர்கள் வாழ்கின்ற தென்பனசை
தஞ்சமென வருபவரை தாங்கிக் காத்தளிக்கும்
மஞ்சனத்திப் பிள்ளையார் மலரடிகள் தொழுதிடுவோம்.

## விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசைப் பாட
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெரிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்ட முப்புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரு மூஷிக வாகன
இப்பொழு தென்னை ஆட்கொள்ள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுந்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறம் இது பொருளென
வாடா வகைதான் வந்தெனக்கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்குங் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்

ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறிவு வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவி லுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்து மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமுஞ் சதுர்முக சூட்சமும்
எண்முக மாக இனிதெனக்கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரிஎட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக்கருளி
என்னை அறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கு மனமு மில்லா மனோலயந்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி யிரண்டு மும்ஒன்றிட மென்ன
அருள் தரும் ஆனந்தத் துழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டி
அணுவிற் கணுவா யப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமு நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக கரத்தின் அரும் பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தன்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரனே.

## முருகன் துதிகள்

முருகனே செந்தில் முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே - ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால்
எப்போதும் நம்பியே கைதொழுவேன் நான்

## கலியுகமெய்ய ஐயனார் பதிகம்

பையரவ மளியானும் பரம்பொருண் முதலுநல்கும் ஐயனே ஓலம்
விண்ணோர்க்காதியே ஓலம் செண்டார் கையனே ஓலம்
எங்கள் கடவுளே ஓலம் மெய்யர் மெய்யனே ஓலம்
தொல்சீர் வீரனே ஓலம்

பூரணைக்கு இறைவா ஓலம்
புஷ்கலை கணவா ஓலம்
வாரணத்து இறைமேல் கொண்டு
வரும் பிரான் ஓலம்

## புஷ்கலை தேவி ஸ்லோகம்

புஷ்கலாம் வாமபாகேது
ச்யாம வர்ணாம் கனஸ்த நீம்
கிரீட முகுடோ பேதாம்
ஸர்வா பர பூஷிதாம்
புஷ்கலாம் தட்சிணே புஷ்பம்
வாமே வை வரதா பவேத்
வாமேது லம் பிதம் பாதம்

## பூர்ணா தேவி ஸ்லோகம்

பூர்ணாம் வா கனகா பாஸாம்
நீலோத்பல தராம் வராம்
கரண்ட மகுடோ பேதாம்
தட்ச பார்ச் வேது ஸம்ஸ்திதாம்
வாமே கரேச புஷ்பம் ஸ்யாத்
தட்சிணே லம்பிதம் கரம்
குஞ்சிதம் வாம பாதம்து
தட்சிணே லம்பிதம் பவேத்

## நலம் தரும் நந்தி

கந்தனின் தந்தையைத்தான் கவனமாய்ச் சுமந்து செல்வாய்
நந்தனார் வணங்குவதற்கு நடையினில் விலகி நின்றாய்
அந்தமாய் ஆதியாகி அகிலத்தைக் காக்க வந்தாய்
நந்தியேஉனைத் துதித்தேன் நாடி வந்தெமைக் காப்பாய்.

## நால்வர் துதி

பூமியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக்கல் மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழி திருநாவலூர் வன்தொண்டர் பதம்போற்றி
ஊழிவலி திருவாதவூர் திருத்தாள் போற்றி

## குரு ஸ்தோத்திரம்

குருர் ப்ரம்மா குருர் விஷ்ணுர் குருர் தேவோ
மஹேச்வர: குருஸ் ஸாசஷாத் பரம்ப்ரம்ஹே
தஸ்மே ஸ்ரீ குரவே நம: ஸ்ரீ மஹாகுருப்யோ நம:

## நடராஜர் வழிபாடு

குனித்த புருவமும் கொவ்வைச்
செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியில் பால்வெண் ணீறும்
இனித்தம் உடைய எடுத்த
பொற்பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே.

**எடுத்த காரியம் இனிது நிறைவேற**

நினைத்த காரியம் நிறைவேற வேண்டுமா ?
இதைப் பாராயணம் செய்யுங்கள். பாக்கியவான்கள் ஆவீர்கள் .

திருஞானசம்பந்த சுவாமிகன்
நாலடி மேல்வைப்பு

பண்-பழம்பஞ்சுரம்) திருச்சிற்றம்பலம் (3-ந் திருமுறை

சுவாமி -சொக்கநாதர் அம்பிகை- மீனாம்பிகை

வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி யமனொடு தேரரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
பாதி மாதுட னாய பரமனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே.

வைதி கத்தின் வழியொழு காதவக்
கைத வம்முடைக் காரமண் டேரரை
எய்தி வாதுசெ யத்திரு வுள்ளமே
மைதி கழ்தரு மாமணி கண்டனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே.

முறைவ ழக்கமி லாதமா பாவிகள்
புறித லைக்கையர் பாயுடுப் பார்களை
முறிய வாதுசெ யத்திரு வுள்ளமே
மறியு லாங்கையின் மாமழு வாளனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே.

அறுத்த வங்கமா றாயின நீர்மையைக்
கறுத்து வாழ்மண் கையர்கள் தம்மொடும்
செறுத்து வாதுசெ யத்திரு வுள்ளமே
முறித்த வாண்மதிக் கண்ணி முதல்வனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே.

அந்த ணாளர் புரிய மருமறை
சிந்தை செய்யா வருகர் திறங்களைச்
சிந்த வாதுசெ யத்திரு வுள்ளமே

வெந்த நீற தணியும் விகிர்தனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே.

வேட்டு வேள்விசெ யும்பொரு ளைவிளி
மூட்டு சிந்தை முருட்டமண் குண்டரை
ஓட்டி வாதுசெ யத்திரு வுள்ளமே
காட்டி லானை யுரித்தவெங் கள்வனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே.

அழல தோம்பு மருமறை யோர்திறம்
விழல தென்னு மருகர் திறத்திறம்
கழல வாதுசெ யத்திரு வுள்ளமே
தழலி லங்கு திருவுருச் சைவனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே.

நீற்று மேனிய ராயினர் மேலுற்ற
காற்றுக் கொள்ளவு நில்லா வமணரைத்
தேற்றி வாதுசெ யத்திரு வுள்ளமே
ஆற்ற வாள ரக்கற்கு மருளினாய்
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே.

நீல மேனி யமணர் திறந்துநின்
சீலம் வாதுசெ யத்திரு வுள்ளமே
மாலு நான்முக னுங்காண் பரியதோர்
கோல மேனிய தாகிய குன்றமே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே.

அன்று முப்புரஞ் செற்ற வழக! நின்
துன்று பொற்கழல் பேணா வருகரைத்
தென்ற வாதுசெ யத்திரு வுள்ளமே
கன்று சாக்கியர் காணாத் தலைவனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே.

கூட லாலவாய்க் கோனை விடைகொண்டு
வாடன் மேனி யமணரை வாட்டிட
மாடக் காழிச்சம் பந்தன் மதித்த விப்
பாடல் வல்லவர் பாக்கிய வாளரே

திருச்சிற்றம்பலம்

**திருமணம் நடைபெற**

**திருசிற்றம்பலம்**

சுவாமி-மாணிக்கவண்ணநாதர்
அம்மை-வண்டுவார்குழலி

சடையா யெனுமால் சரணீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இருளுண் மெலிவே.

சிந்தா யெனுமால் சிவனே யெனுமால்
முந்தா யெனுமால் முதல்வா வெனுமால்
கொந்தார் குவளை குலவும் மருகல்
எந்தாய் தகுமோ விவளே சறவே.

அறையார் கழலும் மழல்வா யரவும்
பிறையார் சடையும் முடையாய் பெரிய
மறையார் மருகல் மகிழ்வா யிவளை
இறையார் வளைகொண் டெழில்வவ் வினையே.

ஒலிநீர் சடையிற் கரந்தா யுலகம்
பலிநீ திரிவாய் பழியில் புகழாய்
மலிநீர் மருகல் மகிழ்வா யிவளை
மெலிநீர் மையளாக் கவும்வேண் டினையே.

துணிநீ லவண்ணம் முகிறோன் றியன்ன
மணிநீ லகண்டம் முடையாய் மருகல்
கணிநீ லவண்டார் குழலா ளிவடன்
அணிநீ லவொண்கண் ணயர்வாக் கினையே.

பலரும் பரவப் படுவாய் சடைமேல்
மலரும் பிறையொன் றுடையாய் மருகல்
புலருந் தனையுந் துயிலாள் புடைபோந்
தலரும் படுமோ வடியா ளிவளே.

வழுவாள் பெருமான் கழல்வாழ் கவெனா
எழுவா ணினைவா ளிரவும் பகலும்
மழுவா ளுடையாய் ! மருகல் பெருமான் !
தொழுவா ளிவளைத் துயராக் கினையே.

இலங்கைக் கிறைவன் விலங்கல் லெடுப்பத்
துலங்கல் விரலூன் றலுந்தோன் றலனாய்
வலங்கொண் மதிள்சூழ் மருகற் பெருமான்
அலங்கல் லிவளை அலராக் கினையே.

எரியார் சடையும் மடியும் மிருவர்
தெரியா ததொர்தீத் திரளா யவனே !
மரியார் பிரியா மருகற் பெருமான்
அரியா ளிவளை யயர் வாக்கினையே

அறிவில் சமணும் அலர்சாக் கியரும்
நெறியல் லனசெய் தனர்நின் றுழல்வார்
மறியேந் துகையாய் ! மருகல் பெருமான்
நெறியார் குழலி நிறைநீக் கினையே.

வயல்ஞா னம்வல்லார் மருகற் பெருமான்
உயர்ஞா னமுணர்ந் தடியுள் குதலால்
இயன்ஞா னசர்பந் தன்பா டல்வல்லார்
வியன்ஞா லமெல்லாம் விழங்கும் புகழே.

**திருச்சிற்றம்பலம்**

அங்காரக தோஷம் அகல

தலம்-புள்ளிருக்கும் வேளுர் (வைத்தீச்சுரன் கோவில்)

இறைவன் : வைத்திய நாதன் இறைவி : தையல் நாயகி

திருத்தாண்டகம்

**திருச்சிற்றம்பலம**

ஆண்டானை யடியேனை யாளாக் கொண்டு
அடியோடு முடியயன்மா லறியா வண்ணம்
நீண்டானை நெடுங்களமா நகரான் றன்னை
நேமிவான் படையானீ ளுரவோ னாகம்
கீண்டானைக் கேதார மேவி னானைக்
கேடிலியைக் கிளர்பொறிவா ளரவோ டென்பு
பூண்டானைப் புள்ளிருக்கு வே; ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே. 1

சீர்த்தானைச் சிறந்தடியேன் சிந்தை யுள்ளே
திகழ்ந்தானைச் சிவன்றன்னைத் தேவ தேவைக்
கூர்த்தானைக் கொடுநெடுவேற் கூற்றந் தன்னைக்
குரைகழலாற் குமைத்துமுனி கொண்ட வச்சம்
போத்தானைப் பிறப்பிலியை யிறப்பொன் றில்லாப்
பெம்மானைக் கைம்மாவி னுரிவை பேணிப்
போர்த்தானைப் புள்ளிருக்கு வே;ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே. 2

பத்திமையாற் பணிந்தடியேன் றன்னைப் பன்னாட்
பாமாலை பாடப் பயில்வித் தானை
எத்தேவு மேத்து மிறைவன் றன்னை
யெம்மானை யென்னுள்ளத் துள்ளே யூறும்
அத்தேனை யமுதத்தை யாவின் பாலை
யண்ணிக்குந் தீங்கரும்பை யரனை யாதிப்
புத்தேளைப் புள்ளிருக்கு வே;ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே. 3

இருளாய வுள்ளத்தி னிருளை நீக்கி
யிடர்பாவங் கெடுத்தேழை யேனையுய்யத்
தெருளாத சிந்தைதனைத் தெருட்டித் தன்போற்
சிவலோக நெறியறியச் சிந்தை தந்த
அருளானை யாதிமா தவத்து ளானை
யாறங்க நால்வேதத் தப்பா னின்ற
பொருளானைப் புள்ளிருக்கு வே; ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனெ. 4

மின்னுருவை விண்ணகத்தி லொன்றாய் மிக்கு
வீசுங்கா றன்னகத்தி லிரண்டாய்ச் செந்தீத்
தன்னுருவின் மூன்றாய்த்தாழ் புனலி னான்காய்த்
தரணிதலத் தஞ்சாகி யெஞ்சாத் தஞ்ச

மன்னுருவை வான்பவளக் கொழுந்தை முத்தை
வளரொளியை வயிரத்தை மாசொன் றில்லாப்
பொன்னுருவைப் புள்ளிருக்கு வே; ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனெ. 5

அறையார்பொர் கழலார்ப்ப வணியார் தில்லை
யம்பலத்து ணடமாடு மழகன் றன்னைக்
கறையார்மூ விலைநெடுவேற் கடவு டன்னைக்
கடனாகைக் காரோணங் கருதி னானை
இறையானை யென்னுள்ளத் துள்ளே விள்ளா(து)
இருந்தானை யேழ்பொழிலுந் தாங்கி நின்ற
பொறையானைப் புள்ளிருக்கு வே; ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே. 6

நெருப்பனைய திருமேனி வெண்ணீற் றானை
நீங்காதென் னுள்ளத்தி னுள்ளே நின்ற
விருப்பவனை வேதியனை வேத வித்தை
வெண்காடும் வியன்றுருத்தி நகரு மேவி
இருப்பவனை யிடைமருதோ டீங்கோய் நீங்கா
இறையவனை யெனையாளுங் கயிலை யென்னும்
பொருப்பவனைப் புள்ளிருக்கு வே;ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே. 7

பேரா யிரம்பரவி வானோ ரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா வடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப்பானை
மந்திரமுந் தந்திரமு மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் றன்னைத்
திரிபுரங்க டீயெழத்திண் சிலைகைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வே; ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனெ. 8

பண்ணியனைப் பைங்கொடியாள் பாகன் றன்னைப்
படர்சடைமேற் புனல்கரந்த படிறன் றன்னை
நண்ணியனை யென்னாக்கித் தன்னா னானை
நான்மறையி னற்பொருளை நளிர்வெண் டிங்கட்
கண்ணியனைக் கடியநடை விடையொன் றேறுங்
காரணனை நாரணனைக் கமலத் தோங்கும்
புண்ணியனைப் புள்ளிருக்கு வே; ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே. 9

இறுத்தானை யிலங்கையர்கோன் சிரங்கள் பத்தும்
எழுநரம்பி னின்னிசைகேட் டின்புற் றானை
அறுத்தானை யடியார்தம் மருநோய் பாவம்
அலைகடலில் ஆலால முண்டு கண்டம்
கறுத்தானைக் கண்ணழலாற் காம னாகங்
காய்ந்தானைக் கனன்மழுவுங் கலையு மங்கை
பொறுத்தானைப் புள்ளிருக்கு வே; ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே. 10

**திருச்சிற்றம்பலம**

**நன்மகப் பேறு பெற**

சிவஞானச் செல்வனைப் பெற வேண்டுமா?

வெண்காட்டுக்குப் போய் முக்குள நீரில் முறையாக முழுகுங்கள்

திருஞானசம்பந்த சுவாமிகன்

பண்-சீகாமரம்) திருச்சிற்றம்பலம் (2-ம் திருமுறை

சுவாமி -சுவேதவனப்பெருமாள் , வெண்காடுறை விகிர்தனார்

அம்மை - பிரமவித்யாநாயகி

கண்காட்டு நுதலானுங் கனல்காட்டுங் கையானும்
பெண்காட்டு முருவானும் பிறைகாட்டுஞ் சடையானும்
பண்காட்டு மிசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டி லுறைவானும் விடைகாட்டுங் கொடியானே

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினைவு
ஆயினவே வரம்பெறுவ ரையுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாம் தீவினையே.

மண்ணோடுநீ ரனல்காலோ டாகாய மதியிரவி
எண்ணில்வரு மியமான னிகபரமு மெண்டிசையும்
பெண்ணினொடாண் பெருமையொடு சிறுமையுமாம் பேராளன்
விண்ணவர்கோன் வழிபடவெண் காடிடமா விரும்பினனே

விடமுண்ட மிடற்றண்ணல் வெண்காட்டின் றண்புறவின்
மடல்விண்ட முடத்தாழை மலர்நிழலைக் குருகென்று
தடமண்டு துறைக்கொண்ட தாமரையின் பூமறையக்
கடல்விண்ட கதிர்முத்த நகைகாட்டுங் காட்சியதே

வேலைமலி தண்கானல் வெண்காட்டான் றிருவடிக்கீழ்
மாலைமலி வண்சாந்தால் வழிபடுநன் மறையவன்றன்
மேலடர்வெங் காலனுயிர் விண்டபினை நமன்றூதர்
ஆலமிடற் றானடியா ரென்றடர வஞ்சுவரே

தண்மதியும் வெய்யரவுந் தாங்கினான் சடையினுடன்
ஒண்மதிய நுதலுமையோர் கூறுகந்தா னுறைகோயில்
பண்மொழியா லவனாமம் பலவோதப் பசுங்கிள்ளை
வெண்முசில்சேர் கரும்பணைமேல் வீற்றிருக்கும் வெண்காடே

சக்கரமாற் கீந்தானுஞ் சலந்தரனைப் பிளந்தானும்
அக்கரைமே லசைத்தானு மடைந்தயிரா வதம்பணிய
மிக்கதனுக் கருள்சுரக்கும் வெண்காடும் வினைதுரக்கு
முக்குளநன் குடையானு முக்கணுடை யிறையவனே

பன்மொய்த்த வின்மொழியாள் பயமெய்த மலையெடுத்த
உன்மத்த னுரநெரித்தன் றருள்செய்தா னுறைகோயில்
கண்மொய்த்த கருமஞ்ஞை நடமாடக் கடன்முழங்க
விண்மொய்த்த பொழில்வரிவண் டிசைமுரலும் வெண்காடே

கள்ளார்செங் கமலத்தான் கடற்கிடந்தா னெனவிவர்கள்
ஒள்ளாண்மை கொளற்கோடி யுயர்ந்தாழ்ந்து முணர்வரியான்
வெள்ளானை தவஞ்செய்யு மேதகுவெண் காட்டானென்
றுள்ளாடி யுருகாதா ருணர்வுடைமை யுணரோமே

போதியர்கள் பிண்டியர்கண் மிண்டுமொழி பொருளென்னும்
பேதையர்க ளவர்பிரிமி னறிவுடையீ ரிதுகேண்மின்
வேதியர்கள் விரும்பியசீர் வியன்றிருவெண் காட்டானென்
றேதியவர் யாதுமொரு தீதிலரென் றுணருமினே

தண்பொழில்சூழ் சண்பையர்கோன் றமிழ்ஞான சம்பந்தன்
விண்பொலிவெண் பிறைச்சென்னி விகிர்தனுறை வெண்காட்டைப்
பண்பொலிசெந் தமிழ்மாலை பாடியபத் திவைவல்லார்
மண்பொலிய வாழ்ந்தவர்போய் வான்பொலியப் புகுவாரே

**திருச்சிற்றம்பலம**

இல்லற வாழ்க்கை ஒற்றுமையாக அமைய ஓத
வேண்டிய பதிகம்

பண்:இந்தளம்
இராகம்: நாதநாமக்கிரியை

திருச்சிற்றம்பலம்

1. அயில் ஆரும் அம்பு அதனால் புரம் மூன்று எய்து
குயில் ஆரும் மென்மொழியாள் ஒருகூறு ஆகி
மயில் ஆரும் மல்கிய சோலை மணஞ்சேரிப்
பயில்வானைப் பற்றி நின்றார்க்கு இல்லை பாவமே.

2. விதியானை விண்ணவர்தாம் தொழுது ஏத்திய
நெதியானை நீள் சடைமேல் நிகழ்வித்த வான்
மதியானை வண் பொழில் சூழ்ந்த மணஞ்சேரிப்
பதியானைப் பாட வல்லார் வினை பாறுமே.

3. எய்ப்பு ஆனார்க்கு இன்புறு தேன் அளித்து ஊறிய
இப்பால் ஆய் எனையும் ஆள உரியானை
வைப்பான மாடங்கள் சூழ்ந்த மணஞ்சேரி
மெயப்பானை மேவிநின்றார் வினை விடுமே.

4. விடையானை மேல் உலகு ஏழும் இப்பார் எல்லாம்
உடையானை ஊழி தோறுஊழி உளதுஆய
படையானை பண்இசை பாடு மணஞ்சேரி
அடைவானை அடைய வல்லார்க்கு இல்லை அல்லலே.

5. எறி ஆர் பூங்கொன்றையினோடும் இளமத்தும்
வெறி ஆரும் செஞ்சடை ஆர மிலைத்தானை
மறி ஆரும் கை உடையானை மணஞ்சேரிச்
செறிவானைச் செப்ப வல்லார்க்கு இடர் சேராவே.

6. மொழியானை முன்ஒரு நால்மறை ஆறுஅங்கம்
பழியாமைப் பண்இசை ஆன பகர்வானை
வழியானை வானவர் ஏத்தும் மணஞ்சேரி
இழியாமை ஏத்த வல்லார்க்கு எய்தும் இன்பமே.

7. எண்ணானை எண் அமர்சீர் இமையோர்கட்குக்
கண்ணானை கண் ஒரு மூன்றும் உடையானை
மண்ணானை மாவயல் சூழ்ந்த மணஞ்சேரிப்
பெண்ணானைப் பேச நின்றார் பெரியோர்களே.

8. எடுத்தானை எழில் முடி எட்டும் இரண்டும் தோள்
கொடுத்தானை கேடு இலாச் செம்மை உடையானை
மடுத்தார வண்டு இசைபாடும் மணஞ்சேரி
பிடித்து ஆரப் பேண வல்லார் பெரியோர்களே.

9. சொல்லானைத் தோற்றம் கண்டானும் நெடுமாலும்
கல்லானைக் கற்றன சொல்லித் தொழுது ஓங்க
வல்லார் நல் மாதவர் ஏத்தும் மணஞ்சேரி
எல்லாம் ஆம் எம்பெருமான் கழல் ஏத்துமே.

10. சற்றேயும் தாம் அறிவுஇல் சமண் சாக்கியார்
சொற்றேயும் வண்ணம் ஓர் செம்மை உடையானை
வற்றாத வாவிகள் சூழ்ந்த மணஞ்சேரி
பற்றாக வாழ்பவர்மேல் வினை பற்றவே.

11. கண் ஆரும் காழியர்கோன் கருத்து ஆர்வித்த
தண் ஆர் சீர் ஞானசம்பந்தன் தமிழ்மாலை
மண் ஆரும் மாவயல் சூழ்ந்த மணஞ்சேரி
பண்ஆரப் பாடவல்லார்க்கு இல்லை பாவமே.

திருச்சிற்றம்பலம்

**ஜுரநோய் நீங்க**

சுவாமி-சொக்கலிங்கப் பெருமாள்
அம்மை-அங்கயற்கண்ணி

திருஞானசம்பந்த சுவாமிகள்
**திருச்சிற்றம்பலம**

மந்திர மாவது நீறு; வானவர் மேலது நீறு;
சுந்தர மாவது நீறு; துதிக்கப் படுவடு நீறு;
தந்திர மாவது நீறு; சமயத்தி லுள்ளது நீறு;
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே.

வேதத்தி லுள்ளது நீறு; வெந்துயர் தீர்ப்பது நீறு;
போதந் தருவது நீறு; புன்மை தவிர்ப்பது நீறு;
ஓதத் தகுவது நீறு; வுண்மையி லுள்ளது நீறு;

சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவாலவாயான் திருநீறே.

முத்தி தருவது நீறு; முனிவரணிவது நீறு;
சத்திய மாவது நீறு; தக்கோர் புகழ்வது நீறு;
பக்தி தருவது நீறு; பரவ வினியது நீறு;
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே.

காண வினியது நீறு; கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க்கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு;
மாணந் தகைவது நீறு; மதியைத் தருவது நீறு;
சேணந் தருவது நீறு; திருவால வாயான் திருநீறே.

பூச வினியது நீறு; புண்ணிய மாவது நீறு;
பேச வினியது நீறு; பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு; வந்தம தாவது நீறு;
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் திருநீறே.

அருத்தம தாவது நீறு; வவல மறுப்பது நீறு;
வருத்தந் தணிப்பது நீறு; வான மளிப்பது நீறு;
பொருத்தம தாவது நீறு; புண்ணியர் பூசும்வெண் ணீறு;
திருத்தகு மாளிகைசூழ்ந்த திருவாலவாயான் திருநீறே.

எயிலது அட்டது நீறு; இருமைக்கு முள்ளது நீறு;
பயிலப் படுவது நீறு; பாக்கிய மாவது நீறு;
துயிலைத் தடுப்பது நீறு; சுத்தம தாவது நீறு;
அயிலைப் பொலிதரு சூலத் தால வாயான் திருநீறே.

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு; பாவம் அறுப்பது நீறு;
தராவண மாவது நீறு; தத்துவ மாவது நீறு;
அராவணங் குந்திருமேனி யாலவாயான் திருநீறே.

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு;
மேலுறை தேவர்க டங்கண் மெய்யது வெண்பொடி நீறு;
ஏல வுடம்பிடர் தீர்க்கு மின்பந் தருவது நீறு;
ஆலம துண்ட மிடற்றெம் மால வாயான் திருநீறே

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூடாக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத வினியது நீறு;
எண்டிசைப் பட்ட பொருளா ரேத்துந் தகையது நீறு;
அண்டத் தவர்பணிந் தேத்தும் ஆல வாயான் திருநீறே

ஆற்ற லடல்விடை யேறு மாலவா யான்றிரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

திருச்சிற்றம்பலம்

## தொழில் நிரந்தரம் பெற ஓத வேண்டிய பதிகம்

பண்:சீகாமரம்
இராகம்: நாதநாமக்கிரியை

திருச்சிற்றம்பலம்

1. மட்டுஇட்ட புன்னைஅம் கானல் மடமயிலைக்
கட்டுஇட்டம் கொண்டான் கபாலீச் சரம்அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்கு
அட்டுஇட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்.

2. மைப்பயந்த ஒண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பயந்த நீற்றான் கபாலீச் சரம்அமர்ந்தான்
ஐப்பசி ஓண விழாவும் அருந்தவர்கள்
துய்ப்பனவும் காணாதே போதியோ பூம்பாவாய்.

3. வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்
துளக்கில் கபாலீச் சரத்தான்தொல் கார்த்திகைநாள்
தளத்துஏந்து இளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்.

4. ஊர்திரை வேலைஉலாவும் உயர்மயிலைக்
கூர்தரு வேல்வல்லார் கொற்றம்கொள் சேரிதனில்
கார்தரு சோலைக் கபாலீச் சரம்அமர்ந்தான்
ஆர்திரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய்.

5. மைப்பூசும் ஒண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றான் கபாலீச்சரம் அமர்ந்தான்
நெய்ப்பூசும் ஒண்புழுக்கால் நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசம் காணாதே போதியோ பூம்பாவாய்.

6. மடல்ஆர்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடல் ஆட்டுக் கண்டான் கபாலீச் சரம்அமர்ந்தான்
அடல் ஆன்ஏறு ஊரும் அடிகள் அடிபரவி
நடம் ஆடல் காணாதே போதியோ பூம்பாவாய்.

7. மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக்
கலிவிழாக் கண்டான் கபாலீச் சரம்அமர்ந்தான்
பலிவிழாப் பாடல்செய் பங்குனி உத்திரநாள்
ஒலிவிழாக் காணாதே போதியோ பூம்பாவாய்.

8. தண்ணா அரக்கன்தோள் சாய்த்துஉகந்த தாளினான்
கண்ஆர் மயிலைக் கபாலீச் சரம்அமர்ந்தான்
பண்ஆர் பதின்எண் கணங்கள்தம் அட்டமிநாள்
கண்ஆரக் காணாதே போதியோ பூம்பாவாய்.

9. நல்தா மரைமலர்மேல் நான்முகனும் நாரணனும்
முற்றாங்கு உணர்கிலா மூர்த்தி திருவடியைக்
கற்றர்கள் ஏத்தும் கபாலீச் சரம்அமர்ந்தான்
பொன்தாப்புக் காணாதே போதியோ பூம்பாவாய்.

10. உரிஞ்சுஅய வாழ்க்கை அமண் உடையைப் போர்க்கும்

இரும்சாக் கியர்கள் எழுத்து உரைப்ப நாட்டில்
கரும்சோலை சூழ்ந்த கபாலீச் சரத்தான்தன்
பெரும்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்.

11. கான்அமர் சோலைக் கபாலீச் சரம்அமர்ந்தான்
தேன்அமர் பூம்பாவைப் பாட்டுஆகச் செந்தமிழால்
ஞானசம் பந்தன் நலம்புகழ்ந்த பத்தும் வல்லார்
வானசம் பந்தத் தவரோடும் வாழ்வாரே.

திருச்சிற்றம்பலம்

வழக்குகள் வெற்றி பெற இலாபம் பெருகுவதற்கு பெற ஓத
வேண்டிய பதிகம்

பண்:குறிஞ்சி
இராகம்: அரிகாம்போதி

திருச்சிற்றம்பலம்

1. வாசி தீரவே காசு நல்குவீர்
மாசு இல் மிழலையீர் ஏசல் இல்லையே

2. இறைவர் ஆயினீர் மறைகொள் மிழலையீர்
கறைகொள் காசினை முறைமை நல்குமே

3. செய்ய மேனியீர் மெய்கொள் மிழலையீர்
பைகொள் அரவினீர் உய்ய நல்குமே.

4. நீறு பூசினீர் ஏறு அது ஏறினீர்
கூறு மிழலையீர் பேறும் அருளுமே

5. காமன் வேவ ஓர் தூமக் கண்ணினீர்
நாம மிழலையீர் சேமம் நல்குமே

6. பிணிகொள் சடையினீர் மணிகொள் மிடறினீர்
அணிகொள் மிழலையீர் பணிகொண்டு அருளுமே

7. மங்கை பங்கினீர் துங்க மிழலையீர்
கங்கை முடியினீர் சங்கை தவிர்மினே

8. அரக்கன் நெரிதர இரக்கம் எய்தினீர்
பரக்கும் மிழலையீர் கரக்கை தவிர்மினே.

9. அயனும் மாலுமாய் முயலும் முடியினீர்
இயலும் மிழலையீர் பயனும் அருளுமே.

10. பறிகொள் தலையினார் அறிவது அறகிலார்
வெறிகொள் மிழலையீர் பிரிவத அரியதே.

11. காழிமா நகர் வாழி சம்பந்தன்
வீழிமிழலை மேல். தாழும் மொழிகளே.

திருச்சிற்றம்பலம்

**பெரியாழ்வார் அருளிச்செய்த**

திருப்பல்லாண்டு

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா உன்
சேவடி செவ்வி திருக்காப்பு

அடியோமோடும் நின்னோடும்
பிரிவின்றி யாயிரம் பல்லாண்டு
வடிவாய் நின் வலமார்பினில்
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார்சோதி வலத்துறையும்
சுடராழியும் பல்லாண்டு
படைபோர் புக்கு முழங்கும்
அப்பாஞ்சசன் னியமும் பல்லாண்டே.

வாழாட்பட்டு நின் றீருள்ளீரேல்
வந்து மண்ணும் மணமும் கொண்மின்
கூழாட்பட்டு நின்றீர்களை
யெங்கள் குழுவினில் புகுதலொட்டோம்
ஏழாட்காலும் பழிப்பிலோம் நாங்கள்
இராக்கதர் வாழ் இலங்கை
பாழாளாகப் படை பொருதானுக்குப்
பல்லாண்டு கூறுதுமே.

ஏடுநிலத்தி லிடுவதன் முன்னம் வந்து
எங்கள் குழாம் புகுந்து
கூடு மனமுடையீர்கள்
வரம்பொழி வந்தொல்லைக் கூடுமினோ
நாடு நகரமும் நன்கறிய
நமோ நாராயணாய வென்று
பாடு மனமுடைப் பத்தருள்ளீர் வந்து
பல்லாண்டு கூறுமினே.

அண்டக்குலத்துக் கதிபதியாகி
யகர ரிராக்கதரை
இண்டக்குலத்தை யெடுத்துக்களைந்த
இருடிகேசன் றனக்குத்
தொண்டக்குலத்தி லுள்ளீர் வந்து
அடிதொழ தாயிரநாமம் சொல்லிப்
பண்டைக்குலத்தைத் தவிர்ந்து
பல்லாண்டு பல்லாயிரத் தாண்டென்மினே.

எந்தை தந்தை தந்தை தந்தை தம்
மூத்தப்ப னேழ்படிகால் தொடங்கி
வந்து வழிவழியாட் செய்கின்றோம்
திருவோணத் திருவிழவில்

அந்தியம்போதி லரியுருவாகி
யரியை யழித்தவனைப்
பந்தனை தீரப் பல்லாண்டு
பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே:

தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழி
திகழ் திருச்சக்கரத்தின்
கோயிற் பொறியாலே யொற்றுண்டு நின்று
குடிகுடி யாட்செய்கின்றோம்
மாயப் பொருபடை வாணனை
யாயிரந் தோளும் பொழிகுருதி
பாயச் சுழற்றிய ஆழிவல்லானுக்குப்
பல்லாண்டு கூறுதுமே.

நெய்யிடை நல்லதோர் சோறும்
நியதமு மத்தாணிச் சேவகமும்
கையடைக்காயும் கழுத்துக்குப் பூணொடு
காதுக்குக் குண்டலமும்
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து
என்னை வெள்ளுயி ராக்கவல்ல
பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப்
பல்லாண்டு கூறுவனே.

உடுத்துக்களைந்த நின்பீதகவாடை
யுடுத்துக் கலத்ததுண்டு
தொடுத்த துழாய்மலர் சூடிக்களைந்தன
சூடுமித் தொண்டர்களோம்
விடுத்த திசைக்கருமந் திருத்தித்
திருவோணத் திருவிழாவில்
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப்
பல்லாண்டு கூறுதுமே
எந்நா ளெம்பெருமான்
உன்றனக் கடியோமென் றெழுத்துப்பட்ட
அந்நாளே அடியோங்க ளடிக்குடில்
வீடுபெற் றுய்ந்ததுகாண்
செந்நாள் தோற்றித்
திருமதுரையுள் சிலைகுனித்து ஐந்தலைய
பைந்நாகத்தலை பாய்ந்தவனே
யுன்னைப் பல்லாண்டு கூறுதுமே.

அல்வழக் கொன்றுமில்லா
அணிகோட்டியர்கோன் அபிமானதுங்கன்
செல்வனைப்போலத் திருமாலே
நானுமுனக்குப் பழவடியேன்
நல்வகையால் நமோ நாராயணாவென்று
நாமம் பலபரவி
பல்வகையாலும் பவித்திரனே
யுன்னைப் பல்லாண்டு கூறுவனே.

பல்லாண்டென்று பவித்திரனைப்
பரமேட்டியைச் சார்ங்கமென்னும்
வில்லாண்டான் தன்னை வில்லிபுத்தூர்
விட்டுசித்தன் விரும்பிய சொல்
நல்லாண்டென்று நவின்றுரைப்பார்

நமோ நாராயணாய வென்று
பல்லாண்டும் பரமாத்மனைச்
சூழ்ந்திருந் தேத்துவார் பல்லாண்டே.

**-பெரியாழ்வார் திருவடிகளே சரணம்**

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியோனே வேங்கடவா நின்கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துஉன் பவளவாய்க் காண்பேனோ.

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன் -செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன்பால் இன்று.

குடதிசை முடியை வைத்து குணதிசை பாதம்நீட்டி
வடதிசை பின்புகாட்டி தென்திசை இலங்கை நோக்கி
கடல்நிறக் கடவுள் எந்தை அரவணை துயிலுமா கண்டு
உடலெனக் குருகு மாலோ என்செய்கேன் உலகத் தீரே.

த்யானம்

ஓம் நமோ பகவதே வாசுதேவாயா
ஸாந்தாகாரம் புஜகஸயணம் பத்மநாபம் ஸுரேசம்
விஸ்வாகாரம் ககன ஸத்ருசம் மேகவர்னம் ஸுபாங்கம்
லக்ஷ்மீகாந்தம் கமலநயனம் யோகி ஹ்ருத்யான கம்யம்
வந்தே விஷ்ணும் மவபயஹரம் ஸர்வ லோகைகநாதம்
அனேகரூப ரூபாய விஷ்ணவே பரபு விஷ்ணவே

மேகஸ்யாமம் பீதகௌஸேயவாஸம்
ஸ்ரீ வத்ஸாங்கம் கௌஸ்துபோத்பாஸி தாங்கம்
புண்யோபேதம் புண்டரீ காயதாக்ஷம்
விஷ்ணும் வந்தே ஸர்வலோகைக நாதம்

நமஸ்தமஸ்த பூதாணம் ஆதி பூதாய பூக்ருதே

ஸஸங்கசக்ரம் ஸகிரீட குண்டலம்
ஸபீதவஸ்தரம் ஸரஸீருஹேஷணம்
ஸஹாரவக்ஷசஸ்தல ஸோபிகௌஸ்துபம்
நமாமி விஷ்ணும் சிரஸா சதுர்புஜம்

சாயாயாம் பாரிஜாதஸ்ய ஹேமஸிம்ஹாஸனோபரி
ஆஸீனமம் புதஸ்யாமம் ஆயதாக்ஷ மலங்க்ருதம்

சந்த்ரானனம் சதுர்பாஹும் ஸ்ரீவத்ஸாங்கித வக்ஷஸம்
ருக்மிணீ ஸத்யபாமாப்யாம் ஸஹிதம் க்ருஷ்ணமாஸ்ரயே

வாரணமாயிரம்

**நாச்சியார் திருமொழி, 6-ஆம் திருமொழி**

அல்லிநாள் தாமரைமேல் ஆரணங்கின் இன் துணைவி

மல்லி நாடாண் மடமயில் -மெல்லியலாள்
ஆயர் குலவேந்த னாகத்தாள் தென்புதுவை வேயர் பயந்த விளக்கு ,

வாரணமாயிரம் சூழ வலஞ்செய்து
நாரணநம்பி நடக்கின்றா னென்றெதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புரமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான்.

நாளை வதுவை மணமென்று நாளிட்டுப்
பாளை கமுகு பரிசுடைப் பந்தற்கீழ்
கோளரி மாதவன் கோவிந்த னென்பானோர்
காளை புகுதக் கனாக்கண்டேன் தோழீ! நான்.

இந்திரன் உள்ளிட்ட தேவர் குழாமெல்லாம்
வந்திருந் தென்னை மகள் பேசி மந்திரித்து
மந்திரக் கோடி யுடுத்தி மணமாலை
அந்திரி சூட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான்.

நால்திசைத் தீர்த்தங் கொணர்ந்து நனிநல்கி
பார்ப்பனச் சிட்டர்கள் பல்லா ரெடுத்தேத்தி
பூப்புனை கண்ணிப் புனிதனோ டென்தன்னை
காப்பு நாண் கட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான்.

கதிரொளி தீபம் கலசமுட னேந்தி
சதிரிள மங்கையர்தாம் வந்தெதிர்கொள்ள
மதுரையார் மன்ன னடிநிலை தொட்டு எங்கும்
அதிரப் புகுதக் கனாக்கண்டேன் தோழீ! நான்.

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரை தாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்து என்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீ! நான்.

வாய்நல்லார் நல்ல மறையோதி மந்திரத்தால்
பாசிலை நாணற்படுத்துப் பரிதி வைத்து
காய்சின மாகளிறன்னா னென் கைப்பற்றி
தீ வலஞ் செய்யக் கனாக்கண்டேன் தோழீ! நான்.

இம்மைக்கு மேழேழ் பிறவிக்கும் பற்றாவான்
நம்மை யுடையவன் நாராயணன்
செம்மையுடைய திருக்கையால் தாள் பற்றி
அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழீ! நான்.

வரிசிலை வாள்முகத்து என்னைமார் தாம் வந்திட்டு
எரிமுகம் பாரித் தென்னை முன்னே நிறுத்தி
அரிமுக னச்சுதன் கைம்மே லென் கைவைத்து
பொரிமுகந் தட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான்.

குங்கும மப்பிக் குளிர்சாந்தம் மட்டித்து
மங்கல வீதி வலம்செய்து மணநீர்
அங்கவனோடு முடன்சென் றங்கானைமேல்
மஞ்சனமாட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான்.

ஆயனுக்காகத் தான் கண்ட கனாவினை

வேயர் புகழ் வில்லிபுத்தூர்க் கோன் கோதைசொல்
தூய தமிழ்மாலை யீரைந்தும் வல்லவம்
வாயு நன் மக்களைப் பெற்று மகிழ்வரே.

**ஆண்டாள் திருவடிகளே சரணம்**

## ஸ்ரீ காயத்ரி

ஓம்
பூர்ப் புவஸ்ஸீவ
தத்ச விதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோந ப்ரசோதயாத்

## ஸ்ரீ மீனாக்ஷி அம்மன்

அம்மை காமாக்ஷியே கருணா கடாக்ஷியே
அரிய மதுரையாளும் மீனாக்ஷியே
நம்பும் அடியார்கள் கண்ணுறும் காக்ஷியே
நாகையதனில் வாழும் நீலாய தாக்ஷியே
சம்பு மோகித்திடும் காசி விசாலாக்ஷியே
சாலத் திகழும் ஆரூர் கமலாக்ஷியே
அடியாரைக் கரையேற்றும் அகிலாண்ட நாயகியே
கும்பிட்டு உனதடிக் குருகிப் பணிந்தோம்
கௌரியே எழுந்தருள் வாயே.

சகலசெல் வங்களுந் தருமிமய கிரிராச
தனயே! மாதேவி நின்னைச்
சத்தியமாய் நித்தியமுள் ளத்தில் துதிக்குமுத்
தமருக்கு இரங்கி மிகவும்

அகிலமதில் நோயின்மை கல்வி தனதான்யம்
அழகுபுகழ் பெருமை இளமை
அறிவு சந்தானம் வலிதுணிவு வாழ்நாள்வெற்றி
யாகுநல் லூழ்நுகர்ச்சி

தொகைதரும் பதினாறு பேறுந் தந்தருளிச்
சுகானந்த வாழ் வளிப்பாய்
சுகிர்த குணசாலி பரிபாலி யனுகூலி திரி
சூலி மங்கலி விசாலி

மகவுநான் நீதாய் அளிக்கொ ணாதோ மகிமை
வளர்திருக் கடவூரில்வாழ்
வாமிசுப நேமிபுகழ் நாமி சிவகாமிமகிழ்
வாமி யபிராமி யுமையே!

## ஸ்ரீ கண்ணுடைய நாயகி அம்மன்

ஆட்டுவிக்கும் பெருஞ்சக்தி அகிலாண்ட நாயகிதான்
நாட்டரசன்கோட்டையிலே நலங்காக்கும் கண்ணாத்தாள்

பாட்டரசன் கம்பன் பாடித்திரிந்த இடம்
நாட்டரசன்கேட்டை அன்னை நாடியிருக்கும் இடம்

அணிமணியாள் குங்குமத்தாள் அழகுமலர்முகத்தாள்
பணிந்துவரும் பக்தருக்குப் பரவசத்தைத் தான்தருவாள்
தேவியவள் பெயர்சொல்ல தீவினைகள் தூளாகும்
சேவைகளைச் செய்துவர தீராத நோய் நீங்கும்.

கண்நோய்கள் எதுவாயினும் காப்பாற்றும் தெய்வங்கள்
கண்ணுக்குக் கண்ணாக காசினியோர் வணங்குகிறார்
வரிசை மிகுந்துவர வண்ணமணி ஆயிழையார்
சரஞ்சரமாய் வந்துதினம் சக்தியினைப் போற்றுகிறார்.

மாவிளக்குப் போட்டு கண்விளக்கு ஏற்றுகிறார்
பூவிளக்கம் தந்தருளப் புகழ்த்தாயைப் போற்றுகிறார்
மாக்கோலம் போட்டு மணக்கோலம் காட்டுகிறார்
பூக்கோலக்காரியிடம் பூரிக்க வரம் பெறுவார்.

தாயே துணையென்றால் தலைமாட்டில் அவளிருப்பாள்
வாயாரத் துதிப்பவர்க்கு வாழ்க்கையெலாம் துணைவருவாள்
கண்ணாத்தாள் திருப்பெயரைக் கனிவோடு உச்சரிக்க
எண்ணம் நிறைவேற ஏற்றம் பெற்றிடுவார்.

காவல் தேவதையாம் கண்ணாத்தாள் திருவடியை
நாவாரப் போற்றிடுவோம் நலமுடனே வாழ்த்திடுவோம்
மாதுளம்பூ நிறத்தாளை மனதாரக் கும்பிடுவோம்
கோவிலுக்குச் சென்று கோடிமுறை கும்பிடுவோம் .

கண்டிப்பட்டி குடியிருப்பு காளியம்மா

கேட்ட வரம் தந்திடும் நல்
குடியிருப்பு காளியம்மா!
கேட்காமல் தந்திடுவாய்
கேட்கவும் வேண்டுமோ சொல்
தொட்டதெல்லாம் பொன்னாகும்
தொல்லைகள் தொலைந்தோடும்
தொடர் கதையாய் வரும் துன்பம்
துள்ளி ஓடும் உன் முன்னால்
கட்டாக பொன் கிடைக்கும்
கண்டிடவே கண் திறக்கும்
காணாத நாளெல்லாம்
கழியாத நாள் ஆகுமோ
சிட்டான சிறுவன் நான் உன்னை
சிந்தையில் எந்நாளும்
சிந்தாமல் வைத்திருக்க
வரம் தருவாய் என் தாயே !

<u>திருக்காவூர் கர்ப்பரட்சாம்பிகை</u>
<u>108 போற்றி</u>

ஓம் கருகாக்கும் நாயகியே போற்றி
ஓம் கர்ப்ப ரக்ஷாம்பிகையே போற்றி

ஓம் கருகாவூர்தேவியே போற்றி
ஓம் கஷ்டங்கள் தீர்ப்பாய் போற்றி

ஓம் ஈஸ்வரனின் இதயக்கனியே போற்றி
ஓம் கருகாவூர் எந்தையின் கண்மணியே போற்றி
ஓம் முல்லைவனநாதரின் சுந்தரியே போற்றி
ஓம் மூவுலரும் காக்கும்அன்னையே போற்றி

ஓம் மைந்தன் வேண்ட வரம் தருவாய் போற்றி
ஓம் மாதர் மனம் மகிழச் செய்வாய் போற்றி
ஓம் எங்கும் தீராத குறை தீர்ப்பவளே போற்றி
ஓம் எங்களை என்றும் காப்பவளே போற்றி

ஓம் பிள்ளைக் கலி தீர்க்கும்பேரொளியே போற்றி
ஓம் பிறவிப் பயன் தந்து அருள்வாய் போற்றி
ஓம் பிண்டமாய் இருக்கும் கருவளர்ப்பாய் போற்றி
ஓம் பிரம்மனின் படைப்புக்கு உயிர் தருவாய் போற்றி

ஓம் முல்லைவனத்தில் அரசாள்வாய் போற்றி
ஓம் நித்திருவர் தொழுத நித்திலமே போற்றி
ஓம் நற்றவத்திற்கு அருளும் நாயகியே போற்றி
ஓம் நாடிவரும் பக்தர் துயர்களைவாய் போற்றி

ஓம் சர்வ வல்லமை பெற்ற ஈஸ்வரியே போற்றி
ஓம் சர்வேஸ்வரனின் சரிபாதியே போற்றி
ஓம் சங்கடங்கள் தீர்க்கும் சங்கரியே போற்றி
ஓம் சார்ந்து நிற்போரை ரஷிப்பாய் போற்றி

ஓம் பெண்கள் கருவறையை காப்பவளே போற்றி
ஓம் பிரியமுடன் எங்களை வாழ்த்துவாய் போற்றி
ஓம் பாதியில் கலையாத கரு தந்தாய் போற்றி
ஓம் பாரினில் மகிழ்வான் வாழ்வளிப்பாய் போற்றி

ஓம் நெய்யாலே படிமெழுக நீ மகிழ்வாய் போற்றி
ஓம் மெய்யான பக்திக்கு உருகிடுவாய் போற்றி
ஓம் தூய்மையுடன் வணங்குவோர் துயர்துடைப்பாய் போற்றி
ஓம் வாய்மையுடன் வரம் தந்து வளம் தருவாய் போற்றி

ஓம் வேதிகைக்கு அருள் சுரந்த அன்னையே போற்றி
ஓம் வேண்டுபவர் அருகினில் வந்திடுவாய் போற்றி
ஓம் வனிதையரின் வாழ்விற்கு வரமாளாய் போற்றி
ஓம் வாழ்நாளில் வழிகாட்டும் வடிவழகே போற்றி

ஓம் கலைந்த கர்ப்பம் உருவாக்கி உயிர் கொடுத்தாய் போற்றி
ஓம் காமதேனு அழைத்து தாய்ப்பால் தந்தாய் போற்றி
ஓம் தம்பதியாய் வருவோர்க்கு தஞ்சமளிப்பாய் போற்றி
ஓம் தாயே உன் அருள் என்றும் தர வேண்டும் போற்றி

ஓம் வலக்கரத்தால் அபயமளிக்கும் வனிதாமணியே போற்றி
ஓம் இடக்கரத்தால் கர்ப்பத்தைக் காத்து நிற்பாய் போற்றி
ஓம் பத்ம பீடத்தில் அமர்ந்திருக்கும் பார்வதியே போற்றி
ஓம் பிரசவத்தில் துணையிருக்கும் பெரிய நாயகியே போற்றி

ஓம் கருகாமல் கருகாக்கும் கண்மணியே போற்றி

ஓம் கர்ப்புரியில் வசிக்கும் கற்பகமே போற்றி
ஓம் அகில உலகம் காக்கும் லோகநாயகியே போற்றி
ஓம் அன்னை என்ற அருள் தந்து துயர்தீர்ப்பாய் போற்றி

ஓம் மாதவிவநேச்வரரின் மாதரசியே போற்றி
ஓம் முல்லைக் கொடி இடையே வந்த மெல்லியனே போற்றி
ஓம் ஈஸ்வரனின் இதயத்தில் வீற்றிருப்பாய் போற்றி
ஓம் ஈரேழு லோகத்தையும் என்றும் காப்பாய் போற்றி

ஓம் கடம்பவன சுந்தரியே கற்புக்கரசியே போற்றி
ஓம் காலம் பூராவும் கர்ப்பை காப்பவளே போற்றி
ஓம கல்லாக நின்று கருணை பொழிவாய் போற்றி
ஓம கதிரொளியே கனகமே கண்மணியே போற்றி

ஓம் மலடி என்ற பெயர் நீக்கும் மங்களமே போற்றி
ஓம் மங்கையர்க்கு அருகிலிருக்கும் மந்திரமே போற்றி
ஓம் மருத்துவர்க்கும் சக்தி தரும் மாதேவியே போற்றி
ஓம் மறுமையிலும் உடனிருந்து மகிழ்விப்பாய் போற்றி

ஓம் அசையும் கருவை அலுங்காமல் காப்பாய் போற்றி
ஓம் அகிலத்தின் இயக்கத்தில் ஆனந்திப்பாய் போற்றி
ஓம் அம்மா என்றுன்னை ஆராதிப்பேன் போற்றி
ஓம் அம்மாவாய் என்னை ஆக்கினாய் போற்றி

ஓம் மகேஸ்வரி உலகையே ஆள்கிறாய் போற்றி
ஓம் மங்கலங்கள் பல தரும் மாதாவே போற்றி
ஓம் ஸ்ரீ சக்ர வாசினி ஸ்திரீ தனமே போற்றி
ஓம் சத்ரு பயம் நீங்க சரணடைந்தேன் போற்றி

ஓம் பிள்ளையில்லா தவிப்புக்கு பிரசாதமளிப்பாய் போற்றி
ஓம் பிரபஞ்சத்தில் பெண்களைக் காப்பவளே போற்றி
ஓம் பகவானின் ப்ரீதியே பரதேவதையே போற்றி
ஓம் லிரத்யனாமாய் என்னுடன் இருப்பவளே போற்றி

ஓம் உற்சாகமாய் தோன்றும் கர்ப்பம் காப்பாய் போற்றி
ஓம் ஒழுங்காய் என் பிள்ளை பிறக்கச் செய்வாய் போற்றி
ஓம் உன்னையன்றி யாருமில்லை சரணடைந்தேன் போற்றி
ஓம் ஊரார் மெச்ச நான் வாழ வாழ்த்துவாய் போற்றி

ஓம் காந்தக் கண்ணழகி முத்துப்போல் பல்லழகியே போற்றி
ஓம் மின்னும் மூக்கழகி புன் முறுவற் சிரிப்பழகி போற்றி
ஓம் சொர்ணமும் வைரமும் மின்ன ஜொழிக்கும் அழகியே போற்றி
ஓம் ஒய்யார வடிவழகி அருள் மணக்கும் பேரழகியே போற்றி

ஓம் துக்கங்கள் தீர்க்கும் துணையே போற்றி
ஓம் துன்பமில்லா வாழ்வருளும் தேவியே போற்றி
ஓம் சங்கடம் தீர்க்கும் சங்கரியே போற்றி
ஓம் சலனமில்லா வாழ்வருளும் சாம்பவியே போற்றி

ஓம் மழலைச் செல்வம் தர மனமிரங்குவாய் போற்றி
ஓம் மாதர்க்கு நீ என்றும் அரணாவாய் போற்றி
ஓம் கதியென்று நம்பினவருக்கு கருணைசெய்வாய் போற்றி
ஓம் கண்டவுடன் கஷ்டம் தீர்க்கும் கௌரியே போற்றி

ஓம் நெஞ்சிற் கவலைகள் நீக்குவாய் போற்றி
ஓம் செஞ்சுடர் குங்குமம் தரித்தாய் போற்றி
ஓம் அஞ்சுமென் மனத்துக்கு ஆறுதலே போற்றி
ஓம் தஞ்சம் நீயே தாமரையே போற்றி

ஓம் சக்தயின் வடிவமே போற்றி
ஓம் பக்தியுடன் தொழுவோரின் பரதேவி போற்றி
ஓம் நித்தமுன் அருள்வேண்டி நமஸ்கரித்தேன் போற்றி
ஓம் நீயிருக்க பூவுலகில் பயமில்லை போற்றி

ஓம் மனமெல்லாம் நீ நிறைந்தாய் மகேஸ்வரி போற்றி
ஓம் மங்கல வாழ்வுதந்து மகிழ்விப்பாய் போற்றி
ஓம் மங்கையரின் கர்ப்பை காக்கின்றாய் போற்றி
ஓம் கருகாவூர் அரசியே கருணாரசமே போற்றி

ஓம் தலைமுறை தழைக்கச் செய்யும் தாயே போற்றி
ஓம் குலம் வாழ மகருளும் மாதே போற்றி
ஓம் சகலரும் உன் சக்தி சார்ந்தோம் போற்றி
ஓம் சோர்வு நீங்க உன் பாதம் சரணடைந்தோம் போற்றி

ஓம் ஜயம் வேண்டும் ஜயம் வேண்டும் தாயே போற்றி
ஓம் ஜகத்தினில் எங்கள் சக்தி ஓங்க வேண்டும் போற்றி
ஓம் ஜீவனை ஜனிக்க வைக்கும் ஜகன்மாதா போற்றி
ஓம் ஜயமங்களம் ஜயமங்களம் ஜனனியே போற்றி

டாக்டர் **.ஜெயம் கண்ணன்**

ஸ்ரீமஹாலெட்சுமி மூல மந்திரம்

ஓம் ஸ்ரீம் ஸ்ரீரியை நம

சர்வ மங்கள மாங்கல்யே சிவே
சர்வார்த்த சாதகே ! சரண்யே
த்ரயம்பகே தேவி நாராயணி நமோஸ்துதோ

காலை மாலை 108 முறை சொல்லி வந்தால்
விரைவில் லட்சுமி கடாட்சம் கிடைக்கும்.

சகல தேவதா ஸ்ரீகாயத்ரி மந்திரங்கள்
( ஸ்ரீ காயத்ரி கஷ்டங்கள் விலக)

ஓம்
பூர்ப் புவஸ்ஸுவ
தத்ச விதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீம ஹி
தியோ யோந ப்ரசோதயாத்

விஷ்வக்சேனர்
(சகல தொழில்களையும் திறம்பட செய்ய)

ஓம்
விஷ்வக்சே நாய வித்மஹே

வேத்ர ஹஸ்தாய தீமஹி
தந்நோ விஷ்வக்சேந ப்ரசோதயாத்

கருடன்
(முக்தி பெற)

ஓம்
தத்புருஷாய வித்மஹே
சுவர்ண பட்சாய தீமஹி
தந்நோ கருட ப்ரசோதயாத்

ஸ்ரீ மஹா விஷ்ணு

ஓம்
நாராயணாய வித்மஹே
வாசுதேவாய தீமஹி
தந்நோ விஷ்ணு ப்ரசோதயாத்

ஸ்ரீ மஹாலெட்சுமி காயத்ரி

ஓம்
மஹா லக்ஷ்ம்யைச வித்மஹே
விஷ்ணு பத்ந்யைச தீமஹி
தந்நோ லட்சுமி ப்ரசோதயாத்

ஸ்ரீ கிருஷ்ணர்

ஓம்
தாமோதராய வித்மஹே
ருக்மணி வல்லபாய தீமஹி
தந்நோ கிருஷ்ண ப்ரசோதயாத்

ஸ்ரீநரசிம்மர்
( எதிரிகளை வெல்ல தினமும் 11-முறை சொல்லவும்)

ஓம்
வஜ்ர நகாய வித்மஹே
திஷ்ண தம்ஷ்ட்ராய தீமஹி
தந்நோ நரசிம்ஹ ப்ரசோதயாத்

நந்திச்வரர்
(கஷ்டங்கள் விலக -நிம்மதி பெற)

ஓம்
தத்புருஷாய வித்மஹே
சக்ர துண்டாய தீமஹி
தந்நோ நந்தி ப்ரசோதயாத்

ஸ்ரீஸ்வர்ணாகர்ஷண பைரவர்
(சகல செல்வங்களும் பெற தினமும்

108-முறை சொல்லவும்)

ஓம்
பைரவாய வித்மஹே
ஹரிஹரப்ரம் ஹாத்மகாய தீமஹி
தந்நோ ஸ்வர்ணா கர்ஷண பைரவ ப்ரசோதயாத்

**தீவிரமான மனநோய்கள், சித்தபிரமை,**
**ஹிஸ்டீரியா நீங்க உன்மத்த பைரவர் மந்திரம்.**

"ஓம் ஹ்ரீம் அங்க்-க்லீம் உன்மந்தானந்த பைரவ
சர்வ சத்ரு நாசய குரு குரு ஸ்வாஹா"

கர்ப்பிணிகளுக்கு சுகப்பிரசவம் ஆக

ஹே, சங்கர ஸ்மரஹர ப்ரமதா த நாத
மன்னாத ஸாம்ப சசிசூட ஹர த்ரிசூலின்
சம்போ சுகாப்ரசவக்ருத் பவ மே தயாளோ
ஶ்ரீ மாத்ரு பூத சிவ பாலயமாம் நமஸ்தே

வேலை கிடைக்க

"யாதேவி சர்வ பூதேஷு சுபர்ணீ ரூபேண
சமஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நமஹ"

புத்திர பாக்கியம் உண்டாக
( தினசரி 108-முறை சொல்லவும்)

"தேவகி சுத கோவிந்த வாசுதேவ ஜகத்பதே
தேஹிமே தநயம் க்ருஷ்ண த்வாமஹம் சரணம் கத
தேவ தேவ ஜகன்னாத கோத்ரே விருத்திகரப் பிரபோ
தேஹிமே தநயம் சீக்ரம் ஆயுஷ் மந்தம் யசஸ்விஸ்நம்"

பெண்கள் கருவுற

காலையில் வடக்கு நோக்கி உட்கார்ந்து கீழே உள்ள சௌந்தர்யலஹரி சுலோகத்தைக் கூறி தேன் நைவேத்யம் செய்து வந்தால் கர்ப்பம் தரிக்காத பெண்களுக்கு கர்ப்பம் தரிக்கும் . முழு நம்பிக்கையுடனும் ,தீவிர ஈடுபாட்டுடனும் செய்யவும்.

"கதா காலமேத கதய கலிதாலக்த கரசம்
பிபேயம் வித்யார்த்தீ தவசரண நிர்ணே ஜன ஜலம்
ப்ரக்ருத்யா மூகனாம்பி ச கவிதா காரண தயா
கதா தந்தே வாணீ-முககமல தாம்பூலா ஸதாம்"

மாங்கள்யம் பலம் பெற

மங்களே மங்களதாரே
மாங்கள்யே மங்களப்ரதே
மங்களார்த்தம் மங்களேஹி
மாங்கள்யம் தேஹிமே ஸதா

ஸ்ரீராகவேந்திரர் துதி

பூஜ்யாய ராகவேந்த்ராய ஸத்யதர்ம ரதாயச
பஜதாம் கல்ப வ்ருக்--ாய நமதாம் காமதேனவே.

நீண்ட ஆயுள் பெற
மரண பயம் நீங்க
**ஸ்ரீருத்ரம்**

“நமஸ்தே அஸ்து பகவன் விச்வேஸ்வராய
மஹாதேவாய த்ரயம்பகாய - த்ரிபுராந்தகாய
த்ரிகாக்னி காலாய காலாக்னீருத்ராய நீலகண்டாய
ம்ருத்யுத்ஞ்ஜயாய ஸர்வேஸ்வராய ஸதா சிவாய
ஸ்ரீமன் மஹாதேவாய நம.”

மஹா ம்ருத்யுஞ்ஜய மந்திரம்

த்ரயம்பகம் யஜாமஹே ஸீகந்திம் புஷ்டிவர்த்தனம்
உர்வாருஹ மிவ பந்தனாத் ம்ருத்யோர் மு--யமா ம்ருதாத்.

திருமகள் வாழ்த்து

காடு வெட்டிப் போட்டு கடிய நிலந்திருத்தி
வீடு கட்டிக் கொண்டிருக்கும் வேள்வணிகர்-வீடுகட்டு
அன்றைக்கு வந்த எங்கள் அம்மா இலக்குமி நீ
என்றைக்கும் நீங்கா திரு.

ஸ்ரீஅஷ்ட லக்ஷமி ஸ்துதி

**தன லக்ஷமி**

யா தேவீ ஸர்வபூதேஷு புஷ்டிரூபேண ஸம்ஸ்த்திதா
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமோ
நம:

**வித்யா லக்ஷமி**

யா தேவீ ஸர்வபூதேஷு புத்திரூபேண ஸம்ஸ்த்திதா
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமோ
நம:

**தான்ய லக்ஷமி**

யா தேவீ ஸர்வபூதேஷு ஸ்வர்ணரூபேண ஸம்ஸ்த்திதா
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமோ
நம:

**வீர லக்ஷமி**

யா தேவீ ஸர்வபூதேஷு த்ருதிருபேண ஸம்ஸ்த்திதா
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமோ நம:

**ஸௌபாக்ய லக்ஷமி**

யா தேவீ ஸர்வபூதேஷு துஷ்டிரூபேண ஸம்ஸ்த்திதா
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமோ நம:

**ஸந்தான லக்ஷமி**

யா தேவீ ஸர்வபூதேஷு மாத்ருரூபேண ஸம்ஸ்த்திதா
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமோ நம:

**காருண்ய லக்ஷமி**

யா தேவீ ஸர்வபூதேஷு தயாரூபேண ஸம்ஸ்த்திதா
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமோ நம:

**மஹா லக்ஷமி**

யா தேவீ ஸர்வபூதேஷு லக்ஷமீரூபேண ஸம்ஸ்த்திதா
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமோ நம:

**ஸ்ரீ மஹாலக்ஷமி அஷ்டகம்**

1. நமஸ்தேஸ்து மஹாமாயே ஸ்ரீபீடே ஸுரபூஜிதே
ஸங்கசக்ர கதாஹஸ்தே மஹாலக்ஷமி நமோஸ்துதே

2. நமஸ்தே கருடாரூடே கோலாஸுர பயங்கரீ
ஸர்வ பாப ஹரேதேவி மஹாலக்ஷமி நமோஸ்துதே

3.ஸர்வக்ஞே ஸர்வவரதே ஸர்வதுஷ்ட பயங்கரீ
ஸர்வதுக்க ஹரேதேவி மஹாலக்ஷமி நமோஸ்துதே

4.ஸித்திபுத்தி ப்ரதேதேவி புக்தி முக்தி ப்ரதாயினி
மந்த்ரமூர்த்தே மஹாதேவி மஹாலக்ஷமி நமோஸ்துதே

5.ஆத்யந்த ரஹிதே தேவி ஆத்யஸக்தி மஹேஸ்வரி
யோகக்ஞே யோகஸம்பூதே மஹாலக்ஷமி நமோஸ்துதே

6.ஸ்துலஸுக்ஷம மஹாரௌத்ரே மஹாஸக்தி மஹோதரே
மஹாபாப ஹரேதேவி மஹாலக்ஷமி நமோஸ்துதே

7.பத்மாஸன ஸ்திதேதேவி பரப்ரஹ்ம ஸ்வரூபிணி
பரமேஸி ஜகன்மாதா மஹாலக்ஷ்மி நமோஸ்துதே

8.ஸ்வேதாம்பர தரே தேவி நானாலங்கார பூஷிதே
ஜகத்ஸ்திதே ஜகந்மாதா மஹாலக்ஷ்மி நமோஸ்துதே

9.மஹாலக்ஷ்மி யஷ்டகம் ஸ்தோத்ரம் ய: படேத் பக்திமான் நர:
ஸர்வஸித்தி மவாப்னோதி ராஜ்யம் ப்ராப்னோதி ஸர்வதா

10.ஏககாலம் படேந்நித்யம் மஹா பாப வினாசனம்
த்விகாலம் ய: படேந்நித்யம் தனதான்ய ஸமன்வித:

11.த்ரிகாலம் ய: படேந்நித்யம மஹாஸத்ரு வினாஸனம்
மஹாலக்ஷமீர் பவேந்நித்யம் ப்ரஸன்னா வரதாஸுபா

12.யாதேவி ஸர்வ பூதேஷுலக்ஷ்மி ரூபேண ஸமஸ்திதா
நமஸ் தஸ்மை நமஸ்தஸ்மை நமஸ்தஸ்மை நமோ
நம:

## சுந்தர காண்டம்

சீராரும் திறல் அநுமன் மாகடலைக் கடந்தேறி
மும்மதிள்நீள் இலங்கை புக்குக்கடிக்காவில்
வாராருமுலை மடவாள் வைதேவி தனைக்கொண்டு
நின்னடியேன் விண்ணப்பம் கேட்டருளாய் !
அயோத்தி தனில் ஓர்
இடவகையில் எல்லியம் போது இனிது இருத்தல்
மல்லிகை மாமாலை கொண்டாங்கார்த்ததும்
கலங்கியமா மனத்தனளாய்க் கையேகி வரம்வேண்ட
மலக்கியமா மனத்தனனாய் மன்னவனும் மாறாதொழியக்
குலக்குமரா காடுறையப்போ என்ற விடை கொடுப்ப
இலக்குமணன் தன்னோடங்கியதும்
கங்கை தன்னில்
கூரணிந்த வேல்வலவன் குகனோடு
சீரணிந்த தோழமை கொண்டதுவும்
சித்திரக்கூடத் திருப்பப் பரத நம்பி பணிந்ததுவும்
சிறுகாக்கை மூலைதீண்டி மூவுலகும் திரிந்தோடி
வித்தகனே ! இராம ஓ ! நின்னபயம் என்ன
அத்திரமே அதன் கண்ணாள அறுத்ததுவும்
பொன்னொத்த மானொன்று புகுந்தினிது விளையாட
நின்னன்பின் வழிநின்று சிலைபிடித் தெம்பிரானேகப்
பின்னேயங்கு இலக்குமணன் பிரிந்ததுவும்
அயோத்தியர் கோனுரைத்த அடையாளம்
ஈதவன்கை மோதிரமே என்று
அடையாளம் தெரிந்துரைக்க
மலர்குழலாள் சீதையும்
வில்லிருந்தான் மோதிரம் கண்டு
அநுமன் அடையாளம் ஒக்கும் என்று
உச்சிமேல் வைத்து உகக்க
திறள் விளங்கும் மாருதியும்
இலங்கையர்கோன் மாக்கடி காவை யிறுத்து
காதல் மக்களும் சுற்றமும் கொன்று
கடி இலங்கை மலங்க எரித்து

அரக்கர்கோன் சினமழித்து மீண்டு அன்பினால்
அயோத்தியர்கோன் தளிர்புரையும் அடியிணைப் பணிய

**கலைமகள் வழிபாடு**

வெள்ளைத் தாமரைப் பூவிலிருப்பாள்
வீணைசெய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை இன்பம் குலவு கவிதை
கூறுபாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ளதாம் பொருள் தேடி உணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின்று ஒளிர்வாள்;
கள்ளம் அற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத்து உள்பொருள் ஆவாள்

மாதர் தீங்குரல் பாட்டில் இருப்பாள்
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்;
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடங் கொண்டாள்;
வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்.

**திருவிளக்கு அகவல்**

விளக்கே-திருவிளக்கே-வேந்தன்-உடன்பிறப்பே
ஜோதி மணிவிளக்கே-சீதேவி பொன்மணியே
அந்திவிளக்கே-அலங்கார நாயகியே
காந்திவிளக்கே காமாட்சித் தாயாரே
பசும்பொன் விளக்குவைத்து பஞ்சுத்திரிபோட்டு
குளம்போலே எண்ணெய்விட்டு கோலமுடன் ஏற்றி வைத்தேன்
ஏற்றினேன் நெய்விளக்கு எந்தன் குடிவிளங்க
மாளிகையில் ஜோதியுள்ள மாதாவைக்கண்டு மகிழ்ந்தேன் யான்
மாங்கல்யப்பிச்சை மடிப்பிச்சை தாருமம்மா
சந்தானப்பிச்சையுடன் தனங்களும் தாருமம்மா
பெட்டிநிறையப் பூஷணங்கள் தாருமம்மா
பட்டிநிறைய பால்பசுவைத் தாருமம்மா
கொட்டகைநிறைய குதிரைகளைத் தாருமம்மா
புகளுடம்பைத் தாருமம்மா பக்கத்தில் நில்லுமம்மா
அல்லும்பகலும் என் அண்டையில் நில்லுமம்மா

**தெரிசனம் காணல்**

சேவித்தெழுந்திருந்தேன் தேவி வடிவங்கண்டேன்
வச்சிரக்கிரீடங்கண்டேன் வைடூர்ய மேனி கண்டேன்
முத்துக்கொண்டை கண்டேன் முழுப்பச்சைமாலை கண்டேன்
சவுரிமுடி கண்டேன் தாழைமடல் சூடக்கண்டேன்
பின்னழகு கண்டேன் பிறைபோல் நெற்றிகண்டேன்
சாந்துடன் நெற்றிகண்டேன் தாயார் வடிவங்கண்டேன்
கமலத்திருமுகத்தில் கஸ்தூரிப் பொட்டுகண்டேன்
மார்பில் பதக்கம் மின்ன மாலையசையக் கண்டேன்
தங்கஒட்டியாணம் தகதகவென ஜொலிக்கக் கண்டேன்
காலிற் சிலம்பு கண்டேன் காலாழீ பீலிகண்டேன்
மங்கள் நாயகியை மனங்குளிரக்கண்டும்மகிழ்ந்தேன் அடியாள் நான்
அன்னையே அருந்துணையே அருகிலிருந்து காருமம்மா

வந்தவினையகற்றி மகாபாக்கியம் தாருமம்மா
தாயாரும் உன்றன் தாளடியில் சரணம் என்றேன்
மாதாவே யுன்றன் நான் பணிந்தேன்

### ஶ்ரீ ஐயப்பன்

மணிகண்டா மணிகண்டா மாமலைவாசா மணிகண்டா
மானுடரூபா மணிகண்டா -சரணம் சரணம் மணிகண்டா
ஹரிஹரசுதனே மணிகண்டா -மோஹினி சுதனே மணிகண்டா
மோகனரூபா மணிகண்டா -சரணம் சரணம் மணிகண்டா

### திரு அருட்பா-இராமலிங்க அடிகள் அருளியது

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமம் உறவு வேண்டும்;
உள்ஒன்று வைத்துப் புறம்ஒன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்;
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண்டும்; பொய்ம்மை
பேசா திருக்க வேண்டும் ;
பெருநெறி பிடித்து ஒழுகவேண்டும்; மதமானபேய்
பிடியாது இருக்க வேண்டும் ;
மருவுபெண் ஆசையை மறக்க வேண்டும்; உனை
மறவாது இருக்க வேண்டும் ;
மதிவேண்டும் நின்கருனை நிதிவேண்டும்; நோயற்ற
வாழ்வில் நான்வாழ வேண்டும் ;

தருமமிகு சென்னையில் கந்தகோட்டத்துள் வளர்
தலம் ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உன்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே
பெற்ற தாய்தனை மக்கள்மறந் தாலும்
பிள்ளை யைப்பெறும் தாய்மறந் தாலும்
உற்ற தேகத்தை உயிர்மறந் தாலும்
உயிரை மேவிய உடல்மறந் தாலும்
கற்ற நெஞ்சகம் கலைமறந் தாலும்
கண்கள் நின்றிமைப் பதுமறந் தாலும்
நற்ற வத்தவர் உள்ளிருந் தோங்கும்
நமச்சி வாயத்தை நான்மற வேனே.

### பட்டினத்தார் பாடல்கள்

மண்ணும் தணல்ஆற வானும் புகைஆற
எண்அரிய தாயும் இளைப்பாறப்-பண்ணும் அயன்
கையாற வும்அடியேன் கால்ஆறவும் காண்பார்
ஐயா திருவையா றா

ஓடாமல் பாழுக் குழையாமல் ஓரம் உரைப்பவர்பால்
கூடாமல் நல்லவர் கூட்டம்விடாமல் வெங்கோபம் நெஞ்சில்
நாடாமல் நன்மை வழுவாமல் இன்றைக்கு நாளைக்கென்று
தேடாமல் செல்வம் தருவாம் சிதம்பர தேசிகனே

ஊட்டுவிப்பானும் உறங்குவிப்பானும் இங்கு ஒன்றோடொன்றை

மூட்டுவிப்பானும் முயங்குவிப்பானும் முயன்ற வினை
காட்டுவிப்பானும் இருவினைப் பாசக் கயிற்றின்வழி
ஆட்டுவிப்பானும் ஒருவனுண்டே தில்லை அம்பலத்தே

பிறவாதிருக்க வரம்பெறல் வேண்டும் பிறந்துவிட்டால்
இறவாதிருக்க மருந்துண்டு காண்இது எப்படியோ
அறமார் புகழ்தில்லை அம்பலவாணர் அடிக்கமலம்
மறவாதிரு மணவே அதுகாண் நன்மருந் துனக்கே

ஐயும் தொடர்ந்து விழியும் செருகி அறிவு அழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போது ஒன்று வேண்டுவன்யான்
செய்யும் திருவெற்றியூர் உடையீர் திருநீறும் இட்டுக்
கையும் தொழப்பண்ணி ஐந்தெழுத்து ஓதவும் கற்பியுமே

## ஆஞ்சநேயர் வழிபாடு

அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத்தாவி
அஞ்சிலே ஒனறு ஆறாக அரியர்க்காகஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டு அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவன் நம்மை அளித்துக் காப்பான்

கோளாறு பதிகம்

## நவக்கிரங்களால் ஏற்படும் தோஷங்கள் நீங்க

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

என்போடு கொம்பொ டாமை இவைமார் பிலங்க
எருதேறி ஏழை உடனே
பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்து என்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொடு ஒன்றோடு ஏழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேலணிந்து என்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலைய தூர்தி செயமாது பூமி

திசைதெய்வமான பலவும்
அருநெறி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே .

மதிநுதல் மங்கையொடு வடவால் இருந்து
மறைஓதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை மடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு துதர்
கொடு நோய்கள் ஆன பலவும்
அதிகுண நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே .

நஞ்சணி கண்டான் எந்தை மடவாள் தானோடும்
விடைஏறும் நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுண ரோடும் உருமிடியு மன்னும்
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே .

வாள்வரி அதள தாடை வரிகோவணத்தர்
மடவாள் தனோடும் உடனாய்
நாள்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலையானைகேழல்
கொடு நாகமொடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே .

செப்பிள முலைநன் மங்கை ஒரு பாகமாக
விடைபேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாத மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே .

வேள்பட விழிசெய்தன்று விடைமேல் இருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாண்மதி வன்னி கொன்றை மலர் சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன்றனோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே .

பலபல வேடமும் பரன் நாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமகளோடெருக்கு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்

மலர்மிசை யோனும் மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேரு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

கொத்தலர் குழலி யோடு விசையற்கு நல்கு
குணமாய வேட வகிர்தன்
மத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
புத்தரொடு அமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீரு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே .

தேனமர் பொழில்கொள் ஆலைவிளை செந்நெல் துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே.

## சூரிய நமஸ்காரம்

### த்யானம்

சூர்யம் சுந்தர லோகநாத மம்ருதம்
வேதாந்த ஸாரம் சிவம்
ஞானம் பிரம்ம மயம் சுரேச மமலம்
லோகைக சித்தஸ்வயம்
இந்திராதித்ய நராதிபம் சுரகுரும்
த்ரைலோக்ய சூடாமணிம்
பிரம்மா விஷ்ணு சிவஸ்வரூப ஹ்ருதயம்
வந்தே ஸதா பாஸ்கரம்

## ஸ்ரீ நவக்ரஹ வணக்கம்

### சூரிய பகவான்

சீரருள் மிகச்சு ரந்து செகத்துயிர் அனைத்துங் காக்கப்
பேரருள் பிதாவு மாகிப் பெருந்துன்ப இருளையோட்டிக்
காரருள் சுகத்தை நல்கக் கதிர்களா யிரம்ப ரப்பும்
பாரருள் பரிதிப் புத்தேள் சென்னி வைப்பாம்.

### சந்திர பகவான்

செழித்திடச் செல்வம் நல்கிச் செகத்துள உயிர்கட் கெல்லாம்
வழித்திடும் பிதாவு மாகி வல்லிருள் தன்னை யோட்டித்
தழைத்திட அமுதமாகத் தக்கதோர் கதிர்ப ரப்பிப்
பொழிந்திடுங் சோம நாதன் பொற்பதம் தலைக்கொள் வோமே.

## அங்காரக பகவான்

வெற்றியும் வீரம் ஆண்மை விதாணம் பராக்கிர மங்கள
சுற்றமாம் தீரம் நல்கிச் சோதரன் தானும் ஆகிப்
பற்றிய பூமி யின்பம் பரன்பிரு தான்னியம் ஓங்கி
எற்றிசைப் புகழும் சேயின் இருபதம தலைக்கொள்வோமே.

## புத பகவான்

இணக்கமாம் மகிழ்ச்சி இன்பம் இயலுறும் புத்தி யுக்தி
வணக்கமாம் கல்வி மேன்மை வருந்தனம் மகிழ்ச்சி புண்யம்
துணக்கமாம் பந்துவாகித் துலங்கிடச் சுகங்கள் நல்கும்
கணக்கனாம் எந்தை பாதம் கழலடி சென்னி வைப்பாம்.

## வியாழ பகவான்

பெருநிறை செல்வம் மேன்மை பெற்றிடுஞ் சுகங்கல்யாணம்
வருநிறை மரபு நீடி வாய்க்குஞ்சந் ததித ழைக்கத்
தருநிறை ஆடை ரத்னந் தான்பெற அருளும் தேவ
குருநிறை வியாழன் பொற்றாள் குரைகழல் தலைக்கொள் வோமே.

## சுக்கிர பகவான்

திரைகடல் சூழும் பூமி சேர்ந்திடும் உயிர்கட் கெல்லாம்
நிறைதரும் யோக போகம் நீடிய மனைவி இன்பம்
தரைபுகம் வாக னங்கள் தக்கதோர் சுகத்தை நல்கும்
மறைமொழி புகரின் பொற்றாள் மலரடி தலைக்கொள்வோமே.

## சனி பகவான்

கோரிய உலகத் தின்கண் குலவிய உயிர்கட் கெல்லாம்
மீறிடச் சுகம ளித்து மெய்தளர் பிணியை நீக்கிச்
சீறிய துன்பந் தீர்த்து சிறக்கத்தீர்க் காயுள் நல்கும்
காரியின் கமல பாதக் கடிமலர் தலைக்கொள் வோமே.

## இராகு பகவான்

பணியென உருவம் ஆகிப் பட்சமாய் அமுதம் உண்டு
தணியென உயிர்கட் கெல்லாம் தகும்படி யோக போகம்
துணிவுடன் அளித்து நாளும் துலங்கிட இன்பம் நல்கும்
மணமுறும் இராகு பொற்றாள் மலரடி சென்னி வைப்போம்

## கேது பகவான்

மாதுமை பாகன் சொற்ற வரத்தினால் அமுத பானக்
கேதுவும் உடைய னாகி எவ்வுயிர் களுந்த ழைக்கக்
கோதிலா ஞானம் மோட்சம் குருபக்தி அருளும் நல்கும்
கேதுவாம் பகவன் பாதம் கிளர்முடி மிசைக்கொள்வோமே.

## வாழிய நகரத்தார்கள்

வாழி நகரத்தார் வள்ளன்மைமிக் கோர்கள்
ஓழி பலவும் உயர்திருக்க ஆழி சூழ்
இத்தலத்தில் கோயில் இயற்றினார்
ஏத்தலமும் போற்ற இனிது வாழியவே

## மங்கள வாழ்த்து

வான் முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க;
குறைவிலாது உயிர்கள் வாழ்க;
நான் மறை அறங்கள் ஓங்க;
நற்றவம் வேள்வி மல்க;
மேன்மை கொள்சைவ நீதி
விளங்குக உலகம் எல்லாம்.

**-கச்சியப்ப சிவாசாரியார்**

ஆறிரு தடந்தோள் வாழ்க
ஆறுமுகம் வாழ்க
வெற்பைக் கூறுசெய் தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க செவ்வேள் ஏறிய மஞ்ஞை
வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
வாழ்க சீர் அடியா ரெல்லாம்.
தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!
திருச்சிற்றம்பலம்.

**-கச்சியப்பர்**